மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.

முன்னிலை :-திருமதி.ஜா.ஆஃப்ரீன் பேகம், எம்.காம்., எல்.எல்.எம்.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், நத்தம்.

**2025 ம் ஆண்டு ஜுலை திங்கள் 18 ம் நாள் வெள்ளிக்கிழமை**

**இடைநிலை மனு எண்.10/2025**

**உள்**

**அசல் வழக்கு எண்.15/2024**

**கோச்சடை** ... மனுதார்/பிரதிவாதி

... எதிர் ...

**சின்னக்கருப்பன்** ... எதிர்மனுதார்/வாதி

இந்த மனுவானது 29.03.2025 ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு 18.07.2025 அன்று இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதார்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.L.சுந்தரமூர்த்தி, அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதார்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.N.கல்யாணகுமார், அவர்கள் முன்னிலையாகியும், மனுவினை பரிசீலனை செய்தும், இருதரப்பும் கேட்கப்பட்டு இன்றுவரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பித்திடும்,

<u>உத்தரவு</u>

1) இம்மனுவானது அசல் வழக்கில் மனுவில் குறிப்பிட்டவாறு 12.07.2024 ம் தேதி பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிட வேண்டி உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் கட்டளை 9 விதி 7ன் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) மனுவின் சுருக்கம்:-

இம்மனுவில் மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதியாவார். அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/வாதி, மனுதாரருக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். மேற்படி அசல் வழக்கில் கடந்த 12.07.2024 ம் தேதியன்று மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக வாய்தா வந்தபோது அன்றைய தினம் மனுதாரர்/பிரதிவாதி தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் கடந்த 12.07.2024 ம் தேதி எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்படாத காரணத்தினாலும், நீதிமன்றத்திற்கு நேரில் ஆஜராக முடியாததாலும் தனக்கு எதிராக 12.07.2024 அன்று ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுவிட்டது. மேற்படி அசல் வழக்கில் தனக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யவேண்டியது நீதியின் நலன் கருதி அவசியமாய் உள்ளது. இல்லாதுபோனால் தனக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படும். என்றும், இத்துடன் தனது தரப்பில் எதிர்வழக்குரையை தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி 12.07.2024 அன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து பிரதான வழக்கினை மேல்நடத்த உத்தரவிட வேண்டி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்

எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது எதிருரையில் மனுதாரர் மேற்படி ஒருதலைபட்ச உத்தரவை எதிர்த்து சுமார் ஒரு வருடம் கழித்து தகுந்த காரணம் இல்லாமலும், அதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யாமலும் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவானது காலதாமத தோசத்திற்கு உள்ளாகி உள்ளது.

இம்மனுவை அனுமதித்தால் தனக்கு சொல்லவொண்ணாத துயரம் ஏற்பட்டுவிடும் என்றும், எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை எதிர்மனுதாரர் செலவுதொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

4) இருதரப்பிலும் சாட்சிய, சான்றாவணங்கள் தாக்கல் இல்லை. இருதரப்பும் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட் மற்றும் எதிருரை பரிசீலனை செய்யப்பட்டது.

5) இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில், மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா?

**6) <u>தீர்வு</u>**

மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் அசல் வழக்கில் கடந்த 12.07.2024 ம் தேதியன்று மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக வாய்தா வந்தபோது அன்றைய தினம் மனுதாரர்/பிரதிவாதி தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் கடந்த 12.07.2024 ம் தேதி எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்படாத காரணத்தினாலும், நீதிமன்றத்திற்கு நேரில் ஆஜராக முடியாததாலும் தனக்கு எதிராக 12.07.2024 அன்று ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுவிட்டது என்றும், மேற்படி அசல் வழக்கில் தனக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யவேண்டியது நீதியின் நலன் கருதி அவசியமாய் உள்ளது. இல்லாதுபோனால் தனக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படும். என்றும், இத்துடன் தனது தரப்பில் செய்துள்ளதாகவும், மேற்படி 12.07.2024 அன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து பிரதான வழக்கினை மேல்நடத்த உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக எடுத்துரைத்தார்.

6.2) அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கானது ஒருதலைபட்ச விசாரணைக்காக நிலுவையில் உள்ள நிலையில் தனக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒரு தலைபட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் உரிய காலத்தில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததற்கு தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் தாக்கல் செய்யவில்லை என்று தெரிவித்திருந்தாலும், உடல்நிலை சரியில்லாமல் இருந்தததை நிரூபிக்க ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யாத போதிலும், வாதியின் வழக்கு மற்றும் வழக்கின் தன்மை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், எதிர்வழக்குரையை இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ளதை கருத்தில் கொண்டும், தரப்பினர்களுக்கு இடையே உள்ள பிரச்சனைகளை இறுதியாக தீர்மானிக்கவும், தரப்பினர்களுக்கிடையே மேலும், மேலும் வழக்குகள் ஏற்படுவதை தடுக்கவும், மனுதாரர் அசல் வழக்கை மேல் நடத்த விருப்பமாக உள்ளதை கவனத்தில் கொண்டும், நீதியின் நலன் கருதி இம்மனுவை நிபந்தனையுடன் அனுமதிக்கலாம் என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**முடிவாக, மனுதாரர் எதிர்மனுதாரருக்கு செலவுத்தொகையாக ரூ.500/- செலுத்த உத்தரவிட்டும் மேற்கண்ட செலவுத்தொகையை 01.08.2025 தேதியன்றோ, அதற்கு முன்பாகவோ செலுத்தவேண்டும் எனவும், செலுத்த தவறும் பட்சத்தில் இம்மனு எவ்வித உத்தரவின்றி தானாக தள்ளுபடி செய்யப்படும் என்று உத்தரவிடப்படுகிறது.**

இவ்வுத்தரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025 ம் ஆண்டு ஜூலை திங்கள்

18 ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

J.Aafreen Begum Digitally signed by J.Aafreen Begum Date: 2025.07.18 00:34:33 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

நத்தம்.

இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :-இல்லை.

J.Aafreen Begum Digitally signed by J.Aafreen Begum Date: 2025.07.18 00:34:42 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

நத்தம்.